செ.வெ.எண்: 02/மே நாள்: 02.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் கண்ணியமாக வாக்களிப்பது தொடர்பான வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பொதுமக்கள் எடுத்துக்கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், மேலமடை மற்றும் குதக்கோட்டை ஆகிய கிராமங்களில் இன்று (02.05.2016) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், கண்ணியமாக வாக்களிப்பது தொடர்பான வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை பொதுமக்கள் எடுத்துக்கொண்டனர்.

சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்குப்பதிவு நாள் நெருங்குவதை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் வாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேவேளையில் தவறாமல் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், வாக்களிப்பதற்கு எவ்வித பணமோ, பொருளோ ஏதும் பெறாமல் கண்ணியமான முறையில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இன்றைய தினம் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், மேலமடை மற்றும் குதக்கோட்டை ஆகிய கிராமங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், கண்ணியமாக வாக்களிப்பது தொடர்பான வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை பொதுமக்கள் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு.ஜெயக்குமார் உட்பட வட்டாட்சியர், தேர்தல் துணை வட்டாட்சியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**